# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- கத்தோலிக்க திருமறை**

சுட்டெண்:....................... **தரம் - 11** **நேரம் : 03 மணி**

## பகுதி - I

**பொருத்தாமான விடையின் கீழ் கீறிடுக.**

01. திருவிவிலியத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
    1. தனக் 2. செப்து வாயித் 3. ப்றோபேரஸ் 4. பிறவ்படோஸ்

02. இஸ்ராயல் மக்களின் பாலைவனப்பயணத்தின் போது மோசேயால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு விபரம் கூறப்பட்ட நூல்.
    1. எண்ணிக்கை நூல் 2. இசைச்சட்டம்
    3. தொடக்க நூல் 4. தூயலூக்கா

03. ஏலோகிம் பாரம்பரிய மரவுக்குரிய சம்பவம்.
    1. படைப்பு பற்றிய இரண்டாம் கதை 2. ஆதாம் ஏவாள் கதை
    3. காயின் ஆபேல் கதை 4. ஈசாக்கை பலியிடல்

4. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினருள் உள்ளடங்காதது.
    1. நாத்தான், அறியா 2. குல்தா, எலிசா
    3. ஆமோஸ், ஆகாய் 4. எலியா, மீக்காயா

5. யூத விவியத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கை.
    1. 39 2. 73 3. 27 4. 46

6. இறைவனின் அழைப்பிற்கு “இதோ நான் இருக்கின்றேன்” என பதிலளித்த இறைவாக்கினர்.
    1. ஏரேமியா 2. எசாயா 3. எசேக்கியேல் 4. தானியேல்

7. ஏரேமியா என்ற பெயரின் அர்த்தம்.
    1. இறைவன் உயர்த்தியுள்ளார் 2. இறைவன் பலப்படுத்துகிறார்
    3. யாவே மீட்பாராயிருக்கிறார் 4. இறைவன் மேலானவர்

8. மத்தேயு நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு பெயர்.
    1. புதுமைகளின் நற்செய்தி 2. செபத்தின் நற்செய்தி
    3. இறையாட்சியின் நற்செய்தி 4. புறவினத்தார் நற்செய்தி

9. தூய மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட இடம்.
    1. எருசலேம் 2. அகாயா 3. உரோமை நகர் 4. பாலஸ்தீனா

10. நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரே ஒரு அருங்குறி.
    1. அப்பங்களை பலுகச் செய்தமை 2. இலாசரை உயிர்ப்பித்தமை
    3. முடக்குவாத முற்றவரை குணமாக்கியமை 4. கை சூம்பியவரை குணமாக்கியமை

11. நற்செய்தியாளர் அடையாளம்

1. மத்தேயு A. எருது
2. மாற்கு B. கழுகு
3. லூக்கா C. சிங்கம்
4. யோவான் D. மனித முகம்

நான்கு நாற்செய்தியாளர்களினதும் அடையாளங்களின் சரியான ஒழுங்கு முறை.

1. CBDA 2. DCAB 3.ACDB 4. ABDC

12. எல்லாப் படைப்புக்களையும் விட மனிதன் மேன்மையானவன் என்பதை உணர்த்துவது.

1. புத்தி 2. அழகு 3. உயிர் 4.கல்வி

13. சபாத் என்ற செல்லின் பொருளாய் அமைவது.

1. மீட்பின் நாள் 2. ஓய்வு நாள் 3. படைப்பின் நாள் 4. பெந்தக் கோஸ்து நாள்

14. பத்து பெரும் துன்பங்களில் 4 வது துன்பம்.

1. கல்மழை 2. ஈக்களின் பெருக்கம் 3. தவளைகளின் பெருக்கம் 4. காரிருள்

15. மோசேயின் பிறப்பு இடம் பெற்ற காலத்தில் தாதியராக செயற்பட்ட இருவர்.

1. சிப்ரா , தெபோரா 2. அன்னா, பூவா
3. சிப்ரா, பூவா 4. செபுலா, சிப்ரா

16. இறைவன் எரியும் முட்செடி நடுவே யாருக்கு காட்சி கொடுத்தார்.

1. யோசுவாவுக்கு 2. யோசேப்பிற்கு
. 3. ஆரோனுக்கு 4. மோசேக்கு

17. இஸ்ராயல் மக்கள் எகிப்தில் பாரவோனுக்காக கட்டிய நகரங்கள்.

1. பித்தோம், கொமோரா 2. சொதோம், கொமோரா
3. பித்தோம், கிராம்சேசு 4. சிக்கேம், கிராம்சேசு

18. இறைவன் இஸ்ராயல் மக்களுக்கு தண்ணீர் வழங்கிய இடம்.

1. சீனாய் மலை 2. ஒரேபு மலை
3. மாரா 4. இரபீதம்

19. புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தாவாக அழைப்பைப் பெறக் காரணமான சில பிரதான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a. அவர் ஒரு நீதிமான்
b. அவரின் பரம்பரையில் அவரே குற்றமற்றவர்
c. அவர் இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்

இவ் விடயங்களினால் குறிப்பிடப்படும் நபர்.

1. ஆபிரகாம் 2. நோவா 3. ஈசாக் 4. மோசே

20. பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு விடை தருக.

a. வரலாற்று அறிஞர் b. மருத்துவர்
c. ஓவியக்கலைஞர் d. தூய பவுலின் மறைதூதுப் பயணத்தில் கலந்து கொண்டவர்

மேற் கூறிய விபரங்களுக்கு ஏற்ப உறுதிப்படுத்தப்படும் நபர்.

1. புனித யோவான் 2. புனித லூக்கா 3. புனித பேதுரு 4. புனித பர்னபா

21. பின்வரும் நூல்களில் இணைத்திருமுறை நூல்கள் மட்டும் உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

A. தோபித்து
B. ஆகாய்
C. யூகித்து
D. செக்கரியா

1. A, B 2. A, C 3. A, D 4. B, D

22. தூய பேதுருவின் மொழி பெயர்பாளராக இருந்தவர்.

1. தூய மத்தேயு 2. தூய லூக்கா 3. தூய மாற்கு 4. தூய யோவான்

23. நெருப்பு பொறியினால் உதடுகள் தூய்மையாகப்பட்ட இறைவாக்கினர்.

1. எரேமியா 2. ஒசேயா 3. நாத்தான் 4. எசாயா

24. படைப்பு பற்றிய இரண்டாவது கதை எந்த மரபைச் சேர்ந்த ஆக்கமாகும்.

1. குரு மரபை 2. யாவே மரபை 3. எலோகிம் மரபை 4. இணைச்சட்ட மரபை

25. தூய மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலம்.

1. கி.பி 64 - 66 2. கி.பி 60 - 64 3. கி.பி 100 - 110 4. கி.பி 80 - 90

26. பவுலின் அறிவுரைப்படி அவரின் சீடரால் எழுதப்பட்ட திருமுகங்களில் ஒன்று.

1. 1 தீமோத்தேயு 2. எபேசியர் 3. உரோமையர் 4. தீத்து

27.திருவெளிப்பாட்டு இலக்கியத்தில் மரணத்தைக் குறிக்கும் நிறக் குறியீடு.

1. வெளிறிய நிறம் 2. சிவப்பு நிறம் 3. வெள்ளை நிறம் 4. கறுப்பு நிறம்

28. ஞானம் என்பதைக் குறிக்கும் எபிரேயச் சொல்.

1.ஹொக்மா 2. எமக்னா 3. வரீஹா 4. றேக்னா

29. யேசுவின் தோள் மீது சுமத்தப்பட்ட சிலுவையைச் சுமந்து கொண்டு செல்ல உதவியவர்.

1. சிரேனிய சீமோன் 2. சீமோன் பேதுரு 3. உரோமைய படைவீரர் 4. நிக்கதேமு

30. திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியானவர்.

1. பவுல் 2. பேதுரு 3. தூய யாக்கோபு 4. தூய ஸ்தேவான்

31. தூய பவுலுடன் 1வது தூதுரைப் பயணத்தில் இணைந்து கொண்டவர்கள்.

1. பர்னபா, சீலா 2. யோவான் மாற்கு, பர்னபா
3. சீலா, தீமேத்தேயு 4. தீமேத்தேயு, பர்னபா

32. “பிற இனத்தாரின் திருத்தூதுர்” என அழைக்கப்பட்டவர்.

1. தூய பேதுரு 2. தூய பிலிப்பு 3. தூய பவுல் 4. தூய அந்திரேயா

33. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் ஒன்று.
1. தேவவேத புராணம்  2. தேவகாவியம்  3. மங்களகீதம்  4. வியாகுல பிரசங்கம்

34. மதுபானம் அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் தவறான செயல் எனப் பத்துக்கட்டளைகளில்.......... எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
1. 5 ம் கட்டளை  2. 7ம் கட்டளை  3. 8 ம் கட்டளை  4. 10 ம் கட்டளை

35. "பிள்ளைகளே உங்கள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியுங்கள் ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது" இவ் இறைவார்த்தை குறிப்பிடப்பட்டிருப்பது.
1. எபேசியருக்கு எழுதிய திருமுகம்  2. கொலோசேயர் திருமுகம்
3. சபை உரையாளர் நூல்  4. சீராக்கின் ஞானம் நூல்.

36. திருவழிபாட்டு ஆண்டில் பச்சை வர்ணம் பயன்படுத்தப்படுவது.
1. தவக்காலத்தில்  2. பொதுக்காலத்தில்
3. பாஸ்காகாலத்தில்  4. கிறிஸ்து பிறப்புக் காலததில்

37. தவக்காலம் ஆரம்பிப்பது.
1. குருத்தோலை ஞாயிறன்று  2. பெரிய வியாழனன்று
3. வீபூதிப் புதனன்று  4. பெரிய வெள்ளியன்று

38. பரூசியா என்பதன் பொருள்.
1. யேசுவின் 2ம் வருகை  2. மரியாலின் அமல உற்பவம்  3. யேசு மீட்பர்  4. பாவிகள்

39. புதிய ஏற்பாட்டின் உன்னத குரு.
1. மெல்கிசதெக்  2. செக்கரியா  3. யோவான்  4. யேசுக்கிறிஸ்து

40. எகிப்தியர் முகங்கொடுத்த எட்டாவது துன்பம்.
1. கல்மழை  2. தலைமகன் சாவு
3. வெட்டுக்கிளிகள் பரவுதல்  4. ஈக்களின் பெருக்கம்.

(40×1=40 புள்ளிகள்)

## பகுதி - II

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பழைய ஏற்பாடு , பதிய ஏற்பாட்டில் காணப்படும் வெளிப்பாட்டு நூல்களைத் தருக?
02. பழைய ஏற்பாட்டின் படி பலி செலுத்துவதன் நோக்கங்கள் 2 தருக?
03. பிலாத்துவின் முன்னிலையில் யேசு மேல் சுமத்தப்பட்ட குற்றங்கள் 2 தருக?
04. இஸ்ரேயலரின் இறைவாக்கினரை வகைப்படுத்தும் பிரதான இரு பிரிவுகளும் எவை?
05. படைப்பு பற்றி இரண்டாவது கதையின் படி கடவுள் மனிதனுக்கு கொடுத்த பெறுப்புக்கள் 2 எவை?
06. தூய லூக்கா நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் 2 தருக?
07. தூய நற்கருணையின் சிறப்பியல்புகள் 2 தருக?
08. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் 2 குறிப்பிடுக?
09. ஆரம்பத் திருச்சபையின் பண்புகள் 2 தருக?
10. யாவே பாரம்பரியத்தின் பண்புகள் 2 தருக?

(10×2=20 புள்ளிகள்)

**02** 1. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினார் இருவரைக் குறிப்பிடுக?
2. இறைவாக்கினார் எசாயா இறைவனால் அழைக்கப்பட்ட விதத்தினை சுருக்கமாக தருக?
3. இறைவனின் பிள்ளையாக அழைப்பு பெற்ற நீர் இன்றைய சமூகத்தில் சான்று பகரும் விதம் பற்றி ஐந்து காரணிகள் மூலம் விளக்குக?

(10 புள்ளிகள்)

**03.** 1. எகிப்தியர் முகம் கொடுத்த பெரும் துன்பங்கள் 2 எழுதுக?
2. இஸ்ரயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அரசன் மேற்கொண்ட செயற்பாடுகள் 3 தருக?
3. இஸ்ராயல் மக்கள் விடுதலைப்பயணத்தின் போது அனுபவித்த இறை பராமரிப்பை குறிப்பிட்டு அதனை நீர் எவ்விதம் அனுபவித்தீர் என சுருக்கமாக எடுத்துக்காட்டுக?

(10 புள்ளிகள்)

**04.** 1. படைப்பு பற்றிய 1ம் , 2ம் கதைகள் எழுதப்பட்ட பாரம்பரியங்களை தனித்தனியே குறிப்பிடுக?
2. எல்லாப் படைப்புகளிலும் மேலானவன் மனிதன் என்பதை பிரதிபலிக்கும் பண்புகள் 3 தருக?
3. இறைவனின் கட்டளையை மீறியதால் ஆதிப் பெற்றோர், பாம்பு என்பவற்றிக்கு கொடுக்கப்பட்ட தண்டனைகளைத் தருக?

(10 புள்ளிகள்)

**05.** சிறுகுறிப்பு எழுதுக.
1. திருமுழுக்கு யோவானின் பணி.
2. பத்துப் பெரும் துன்பங்கள்.
3. தவக் காலம்.
4. புனித யோசவாஸ் அடிகள்.

(10 புள்ளிகள்)